# இயேசு பிரான் பிள்ளைத்தமிழ்

***முனைவர் அ. வசந்தி***
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
போப் கல்லூரி, சாயர்புரம்

***முன்னுரை***
*இலக்கிய வரலாறு காலங்களை வெளிக்காட்டும் கண்ணாடி என்பர். கிறித்தவ இலக்கியம் சமயம், அறம், கல்விப் பணிகளை சீரும் சிறப்புடன் செய்வதைக் காணலாம். கிறித்தவ சமயச் சிற்றிலக்கியமான இயேசு பிரான் பிள்ளைத் தமிழ் யுதேயா நாட்டில் பெத்தலகேம் என்னும் இடத்தில் பிறந்த இயேசு பிரானின் குழந்தை பருவத்தை ஆராய்வதை இவ்வாய்வுக் கட்டுரையாகும்.*

**மலர்: 11**

**சிறப்பிதழ்: 2**

**மாதம்: ஜூலை**

**வருடம்: 2023**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS2i1-July.6420

## ஆசிரியர் வரலாறு

தந்தை அருள், தாய் செபஸ்டியம்மாள் தந்தை பெயர் அருளையும் பெற்றோர் செல்லமாக அழைத்த செல்லத்துரை என்ற பெயரையும் சேர்த்து அருள்செல்லதுரை என அழைத்தனர். படிப்பு முதுகலையும் பொறியியலும் பட்டயமும் பொறியியல் ஆசிரியர் பட்டய படித்தார்.

பாரத மிகுமின் நிறுவனத்தில் 30ஆண்டுகள் பொறியியல் துறையிலும் கணிதத்துறையிலும் பணியாற்றியுள்ளார். வண்ணப்பாவலர், திருவள்ளுவர் தவச்சாலை பட்டம் வாங்கியுள்ளார். எழுதிய நூல்கள் ஐந்து அடைக்கல அன்னை புகழ், இயேசுபிரான் பிள்ளைத்தமிழ், வேளாங்கண்ணி பதிற்றுப்பத்து, மனைமாட்சி வண்ணம், விவிலியமும் தமிழக்கமும்.

## பிள்ளைத்தமிழ்

பிள்ளைக்கவி, பிள்ளைப்பாட்டு என்றும் பாட்டியல்களில் சிற்றிலக்கியம் கூறப்படுகிறது. தெய்வங்களையும் மனிதர்களையும் பிள்ளையாகக் கற்பனை செய்து பாடப்படுகிற இலக்கியம் இது ''குழவி மருங்கினும் கிழவது''(1) ஆகும் என்று குழந்தைகளையும் பாட்டுடைத் தலைவர்களாகக் கற்பித்த இலக்கியம் படைத்தலைத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. பத்துப் பருவங்களாகப் பகுத்து, பருவத்திற்குப் பத்துப் பாடல்களாக நூறு பாடல்களைக் கொண்டு பிள்ளைத்தமிழ் அமையும். இது ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழ் என இருவகைப்படும். சிற்றில் சிதைத்தல், சிறுபறை முழக்கல் அல்லது சிறுபறை அறைதல், சிறுதேர் உருட்டல் என்னும் மூன்றும் ஆண்பாற் பிள்ளைத்தமிழுக்கு சிறப்பாக உரியவை.

பெண்பாற் பிள்ளைத்தமிழில் கழங்கு, சிற்றில் இழைத்தல், அம்மானை, நீராடல், ஊசல் ஆகியவற்றுள் எவையேனும் மூன்று இடம் பெறும்.

**கிறித்தவச் சமயம் சார்ந்த பிள்ளைத்தமிழ் நூல்கள்**

1. இயேசுபிரான் பிள்ளைத்தமிழ்
2. இறைமைந்தர் பிள்ளைத்தமிழ்
3. ஏசுநாதர் பிள்ளைத்தமிழ்
4. கன்னிமரி பிள்ளைத்தமிழ்
5. தொன்போஸ்கா பிள்ளைத்தமிழ்
6. பிள்ளைத் தமிழ்
7. வீராமாமுனிவர் பிள்ளைத்தமிழ்
8. வேதநாயகர் பிள்ளைத்தமிழ்
9. வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய அன்னை பிள்ளைத்தமிழ்
10. வேளை மரியன்னை பிள்ளைத்தமிழ்

எனப் பல கிறித்தவ சமயப் பிள்ளைத்தமிழ் நூல்கள் தோன்றியுள்ளன.

**நூல் அமைப்பு**

இயேசு பிரான் பிள்ளைத்தமிழ் ஆண்பாற்பிள்ளைத்தமிழ் ஆகும். ஆசிரிய மண்டிலங்களால் நூறு பாடல்களால் அமைந்துள்ளது. ஒவ்வொரு பருவத் திற்கும் முறையே பத்துப்பத்துப் பாடல்கள் அமைந்துள்ளன. இந்நூலில் காப்புப் பருவம், செங்கீரைப்பருவம், தாலப் பருவம், சப்பாணிப் பருவம், முத்துப் பருவம், வருகைப்பருவம், அம்புலிப் பருவம், சிற்றிற் பருவம், சிறுபறைப் பருவம், சிறுதேர்ப்பருவம் எனப்பத்துப் பருவங்கள் அமைந்துள்ளன.

**காப்புப் பருவம்**

**"மாண்பு கொள் இறைவ, மகவிதன் நலநன
வளர்த்தருள்க புரிக காப்பே''(2)**

இயேசு பிரான் அவரை இறைவன் நலம் தந்து காத்தருள வேண்டும்.

**"என்தலைவன் என்குருவென் அரசன்
தானே''(3)**

இயேசு பிரான் தலைவனாகவும், இறைவனாகவும், மன்னனாகவும் பிறந்து வாழ்கின்ற இறைவனை உன்னை பிதா காத்தருள வேண்டும்.

**செங்கீரைப் பருவம்**

**"செல்லரிய வானுலகத் திறக்க வந்த பெருமானே
செங்கீரை ஆடிய யருளே
சிந்தையெலாம் அள்ளுகின்ற செங்கதுப்பு முகமசையச்
செங்கீரை ஆடி யருளே''(4)**

வானுலகத் திறக்கவந்த பெருமான் எண்ணங்களால் பலச் செயல்களைச் செய்த இயேசு பிரானை கவிஞர் செங்கீரை ஆடியருளே எனப் பாடினார்.

**தாலப்பருவம்**

**"கங்கை யமுனை காவிரியைக்
கவினார் யோர்தான் புனல் தன்னைக்
கையில் எடுத்துன் காலடிக்குக்
கருத்தாய் வார்த்துப் புகழ்ஓசை"(5)
"தங்கும் உலகம் தாங்க வரும்
தளிரே தாலோ தாலேலோ
தங்கத் தமிழே செங்கதிரே
தலைவா தாலே தாலேலோ"(6)**

கங்கை யமுனை காவிரி நதிகளை பாடியக் கவிஞர் இயேசு பிரான் யோர்தானில் யேவானால் ஞானஸ்நானம் பெற்றார். அந்த யோர்தான் நதியில் நீராடி இவ்வுலகத்தை தாங்கிய இறைவா தாலே தாலே என்று பாடினார்.

**சப்பாணிப்பருவம்**

**"தருவருளத் திருவுளர் தவமகன் கொட்டுக சப்பாணி
தளதள வெனவளர் தமிழ்ப்பயிர் கொட்டுக சப்பாணி" (7)**

பிள்ளைப்பருவங்களில் சப்பாணிப்பருவத்திற்கு சொல்லப்பட்ட விளக்கமாவது குழந்தை

இரு கைகளையும் சேர்த்துத் தட்டும் பருவம் சப்பாணிப்பருவம் எனலாம். செல்வம் வழங்குகின்ற இறைமைந்தன் போன்று தமிழ்மொழி வளர வேண்டும் என்கிறார்.

**முத்தம்**

***“முத்தி யளித்தபதன் சித்தம் கனிந்துகவின்***
***முத்தம் அளித்தருள்கவே***
***முத்தமிழ்ச் சுவையில் முற்றிக் கனிந்தகனி***
***முத்தம் அளித்த ருள்கவே”(8)***

தாய் தந்தை ஆகியோர் குழந்தையை முத்தம் தருமாறு வேண்டுவது முத்தப்பருவம். இயேசுவின் தந்தை யோசேப்பு தாய் கன்னிமரியாள் அவர்களுக்கு முத்தம்யளிப்பதாக பாடியுள்ளார்.

**வருகைப்பருவம்**

***“உலக முடிவில் வருவேன் எனவே***
***உரைத்த பெருமான் வருகவே***
***உலக முழுது முனது நிழலில்***
***உயவே வருக வருகவே (9)***

இயேசு பிரான் உலக முடிவில் இரண்டாம் வருகையில் நியாதிபதியாக வருவீர். அதற்கு முன்பு வரை உலகம் முழுவதும் உம்முடைய நிழல் சார்ந்து இருப்பதாக. உங்கள் வருகைக்கு நீங்கள் வாருங்கள் வாருங்கள் எனப் பாடினார்.

**அம்புலிப்பருவம்**

***“அற்றழியா வாழ்வுதரும் ஆண்டவனின் பிள்ளையுடன்***
***அம்புலீ ஆட வாவே***
***அருளிறைவன் வலப்புறத்தில் அமருமிறைமகனுடனே***
***அம்புலீ ஆட வாவே”(10)***

வானில் உள்ள அம்புலியைக் காட்டி குழந்தையுடன் விளையாடும் பருவம் அம்புலிப்பருவம். பிதாவின் வலது பக்கத்தில் இருக்கும் பிதாவின் மகனே அம்புலீ (நிலா) யிடம் ஆடவா.

**சிற்றில்பருவம்**

***“செந் சொல்லரசே செவி சாய்ப்பாய்***
***சிறியேம் சிற்றில் சிதையேலே***
***தெளிதேன் தமிழில் திளைந்து வரும்***
***திருவே சிற்றில் சிதையேலே”(11)***

சிறுமியர் சிறுவீடு கட்டி விளையாடும் போது சிறுவர் அவனைத் தம் காலால் சிதைத்தலைக் கூறுவதாகும். அப்பொழுது சிறுமியர் தம் சிற்றிலைச் சிதைக்க வேண்டாம் எனப்பாடுவது சிற்றிற் பருவமாகும். உலகத்தை படைத்த இறைவன்

***“கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும். அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்று போம். புதங்கள் வெந்து உருகிப்போம்”***
***- IIபேதுரு 3:10 (12)***

மனிதர்களுக்கான வீடாகிய பூமி சிதறும் எனக்கூறும் விவிலிய வார்த்தையை சிந்தித்து சிற்றில் பருவத்திற்குரிய கருத்தினை பாடலில் காணமுடிகிறது.

**சிறுபறைப் பருவம்**

***“மூன்றுநாள் சென்றபின் முழுவுடம் புயிர்த்தவன்***
***முழக்குக சிறுபறையே***
***முத்தமிழ் நற்றிறம் முற்றும் எரித்தவன்***
***முழக்குக சிறுபறையே” (13)***

தாயும் தகப்பனும் குழந்தையைச் சிறுபறையைக் கொட்டி விளையாடுமாறு பாடுவது சிறுபறைப் பருவமாகும். சிறுபறை மகிழ்ச்சியின் செய்தியாகும். மரித்த இயேசு பிரான் மூன்றாம்நாள் உயிர்த்தெழும்பிய செய்தி இடம் பெற்றுள்ளது.

**சிறுதேர்ப் பருவம்**

***“திருமூன்று மெய்ப்பொருளாய்த் திகழ்பவனே எந்தலைவ***
***சிறு தேருருடுடியருளே” (14)***

குழந்தையைச் சிறுதேர் ஊருடுடி விளையாடுமாறு தாயும் தகப்பனும் வேண்டுவது சிறுதேர்ப் பருவமாகும். இயேசு பிரான்

பிதா, குமரன், பரிசுத்த ஆவியானவரா வீற்றிருக்கிறார் என்பதை சிறுதேர் வழியாக உணர்த்தியுள்ளதைக் காணமுடிகிறது.

## முடிவுரை

இயேசு பிரான் பிள்ளைத்தமிழில் அருள் செல்லத்துரை அவர்களின் வாழ்க்கை வரலாறு, நூலின் அமைப்பு, இயேசுவின் வாழ்க்கை வரலாறு மற்றும் சிற்றிலக்கியப் பிரிவுகளில் இரு பிள்ளைத்தமிழில் ஒன்றான ஆண்பாற் பிள்ளைத் தமிழின் பத்து பருவங்களை விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

## அடிகுறிப்புகள்

1. தொல்காப்பியம் நூற்பா 1030.
2. அருள். செல்லத்துரை, இயேசுபிரான் பிள்ளைத்தமிழ். பக் 15.
3. மேற்படி. பக்.17.
4. மேற்படி. பக்.21.
5. மேற்படி. பக்.33.
6. மேற்படி. பக்.33.
7. மேற்படி. பக்.48.
8. மேற்படி. பக்.55
9. மேற்படி. பக்.69
10. மேற்படி. பக்.79.
11. மேற்படி. பக்.93
12. பரிசுத்த வேதாகமம் பக்.324.
13. மேற்படி. பக்.101
14. மேற்படி. பக்113

## துணைநூற்பட்டியல்

1. இயேசுபிரான் பிள்ளைத்தமிழ், அருள்வாக்குமன்றம், தூய சின்னப்பர் இறையியல் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.
2. தொல்காப்பியம் பொருளதிகாரம், நச்சினார்க்கினியர் உரை, கழக வெளியீடு, சென்னை
3. பரிசுத்த வேதாகமம், இந்மிய வேதாகமச் சங்கம், 206, மகாத்மா காந்தி சாலை, பெங்களூர்.